# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 9

| | | | |
|---|---|---|---|
| Name | : சுமதி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ராஜன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of May 2024.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல் நிலையத்தில் பெண் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். 09.11.2017 அன்று பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது அன்றைதினம் இவ்வழக்கு சம்மந்தமாக அசா 1 பிருந்தா, அவரது மகள் அனுசியா மற்றும் ஆஜர் எதிரி ஆகியோரின் மரபணு பரிசோதனை செய்வதற்கு FTA கார்டுகளை சென்னை, மரபியல் பரிசோதனை கூடத்தில் இருந்து பெற்று வருவதற்கு நீதிமன்றத்தில் இருந்து கொடுத்த கடிதம் மற்றும் கடவுச்சீட்டை ஆய்வாளர் அவர்கள் என்னிடம் கொடுத்தார்.

2. அன்றையதினம் மேற்படி கடிதம் மற்றும் கடவுச்சீட்டை பெற்று 10.11.2017 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சென்று கொடுத்தேன். மேற்படி ஆய்வகத்தில் எனக்கு கொடுத்த கடிதம் மற்றும் FTA கார்டுகள் என்று எழுதப்பட்ட ஒரு கவர் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு 11.11.2017 அன்று நீதிமன்றத்தில் அவற்றை ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் சென்னை செல்வதற்கு எனது கடவுச்சீட்டில் பேருந்து அல்லது இரயிலில் செல்வதற்கு ஏதேனும் குறிப்புகள் கொடுத்திருந்தார்களா என்றால் அவ்வாறு எதுவும் குறிப்புகள் கொடுக்கவில்லை. பொதுவாக அவ்வாறு எழுதும் வழக்கம் இல்லை. நீதிமன்றத்தில் 11.11.2017 அன்று சென்னை தடய அறிவியல்

ஆய்வகத்தில் கொடுத்த கடிதம் மற்றும் FTA கார்டுகள் கொண்ட கவரை ஒப்படைத்தேன் என்று ஆய்வாளர் விசாரைணியல் கூறியுள்ளேன். நான் அய்வாளரிடம்தான் மேற்படி கடிதம் மற்றும் FTA கார்டுகள் கொண்ட கவரை ஒப்படைத்தேன் என்றாலும் நீதிமன்றத்தில் அவற்றை ஒப்படைத்ததாக முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.